சார்பு நீதிமன்றம், மன்னார்குடி

OS 174/2019

25.02.2026.

DW - 1

பி.வா.சா.1. ராமலிங்கம், த/பெ.காசிநாதன் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-

எனது எதிர் வழக்குரையிலும் நிருபண வாக்குமூலத்திலும் மாரியப்ப தேவருக்கு உள்ள 25 வாரிசுகள் யார் யார் என்றும் அவர்கள் எந்த ஊர் என்றும் எங்கு வசிக்கிறார்கள் என்றும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் - சரிதான். நான் சொல்வதுபோன்று வாரிசுகள் யாரும் கிடையாது என்றால் - சரியல்ல. வழக்கு சொத்துக்கள் மாரியப்ப தேவருக்கு சொந்தமானது என்றும் குடும்ப சொததுக்களை பொறுத்து ஏற்கனவே வாரிசுகளுக்குள் வாய்மொழியாக பாகப்பிரிவினை செய்துக்கொண்டோம் என்றால் - சரிதான். அவ்வாறு வாய்மொழியாக குறித்து அவரவர் பாகத்திற்கு தனித்தனியே ஒதுக்கீடு செய்யப்பட்டது என்றாலும் - சரிதான். சாட்சி அந்த சொத்துக்களை விற்பனை செய்துள்ளதாகவும் கூறுகிறார். அவ்வாறு வாய்மொழியாக கிடைத்த சொத்துக்கள் எனது தகப்பனார் காசிநாதன், வாதியின் தகப்பனார் சிவமணி மற்றும் எனது பெரியப்பா கோவிந்தராஜ் ஆகியோர்களுக்கு கிடைத்து தனித்து அனுபவித்து வருகிறார்கள் என்றால் - சரிதான். கோவிந்தராஜீக்கு கிடைத்த சொத்தை அவரது வாரிசுகளும் சிவமணிக்குகிடைத்த சொத்தை அவரது வாரிசுகளும் விற்பனை செய்துள்ளார்கள். எனது தகப்பனரான காசிநாதனுக்கு கிடைத்த சொத்தை நானும் எனது சகோதரர் சிவக்குமாரும் பத்திரம் மூலமாக பாகப்பிரிவினை செய்துக்கொண்டுள்ளோம். நான் தாக்கல் செய்துள்ள கிரய பத்திரங்களான பி.வா.சா.ஆ.1 முதல் 8 வரையிலான ஆவணங்கள் அந்தந்த வாரிசுகளால் விற்பனை செய்யப்பட்ட ஆவணங்கள் என்பதை காட்டக்கூடியது தான் என்றால் - சரிதான். வழக்கு சொத்துக்கள் அனைத்தும் எனது பாட்டி செங்கம்மாளுக்கு சொந்தமான சொத்து என்றாலும் அவர் பெயரில்தான் கிராம கணக்குகளில் பட்டாக்களில் பதிவாகியுள்ளது என்றாலும் -தவறாகும். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆவணத்தில் செங்கம்மாள் என்று கண்டுள்ளது எனது பாட்டி என்றால் - சரிதான். நான் சொல்வதுபோன்று வழக்கு சொத்து மாரியப்பனுக்கு சொந்தமானது அல்ல என்றாலும் எனது பாட்டி செங்கம்மாளுக்கு சொந்தமானது தான் என்றாலும் - சரியல்ல. வழக்கு சொத்துக்கள் எனது பாட்டனார் மாரியப்ப தேவருக்கு சொந்தமான சொத்து என்பதை காட்டுவதற்குரிய ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் - சரிதான். நான் குடியிருக்கும் இடத்திற்கு வீட்டு வரி மற்றும் மின்சார இணைப்பு யார் பெயரில் உள்ளது என்றால் - எனது பெயரில் உள்ளது. சிவமணி மற்றும் ரவி குடியிருக்கும் இடத்திற்குரிய வீட்டு வரி ரசீது மற்றும் மின்சார இணைப்பு யார் பெயரில் உள்ளது என்றால் -அவர்களது பெயரில் உள்ளது. கோவிந்தராஜ் மனைவி செங்கம்மாள் இந்த வழக்கில் தரப்பினர் என்றால் - சரிதான். செங்கம்மாள் வழக்கு சொத்திலிருந்தும் வாதி வீட்டிற்கும் மேற்குபுறத்தில் குடியிருந்து வருகிறார் என்றால் - சரிதான். தற்போது அனுபவித்து வரும் வகையில், அவரவர் குடியிருந்து வரும் பாகவீத சொத்தில் மற்றவர்களுக்கு பாகம் இல்லை என்பதை நான் ஒப்புக்கொள்கிறேனா என்றால் - ஒப்புக்கொள்கிறேன். வழக்கு சொத்தில் உள்ள 3 வீடுகளுக்கும்

ஒரே மேற்கூரை தான் உள்ளது என்றால் - சரிதான். ஓடுகள் எல்லாம் உடைந்து சேதமாகிதான் உள்ளது என்றால் - சரிதான். அந்தந்த பகுதிகளை அவரவர் சரிச்செய்துக் கொள்ளவேண்டியது. ரவி, சிவமணி இருக்கும் வீட்டில் உள்ள மேற்கூரை சேதமடைந்துள்ளது என்றாலும் வீட்டின் சுவர் மண் சுவர் என்றாலும் - சரிதான். வாதி குடியிருந்து வரும் வீட்டை இடித்துவிட்டு அதே இடத்தில் புதியதாக வீடு கட்டுவதில் எனக்கு ஆட்சேபணை உள்ளதா என்றால் - இல்லை. நான் சொல்வதுபோன்று வேறு வாரிசுகளோ பிரிக்க வேண்டிய சொத்துக்களோ இல்லை என்றால் - சரியல்ல. வழக்கு சொத்தில் வாதி கோரியுள்ளவாறு அவர் அனுபவத்தில் உள்ள 1/3 பாகத்தை பொறுத்து அவர் தீர்ப்பு பெற உரிமையுள்ளவர் என்றால் - சரியல்ல.

என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப்பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

MUTHURAMAN

Digitally signed by MUTHURAMAN
DN: cn=MUTHURAMAN, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.02.25 17:57:18 +0530

சார்பு நீதிபதி,

மன்னார்குடி.